# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 121/2019 and 175/2019

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதி (எ) சரவணமுருகன் |
| தந்தை பெயர் | : | பகவந்து |
| வா.த.சா | : | 40 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 24.06.2025அன்று **திரு. M. ராஜகுமரேசமன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1 - மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் எனக்குத் தெரியுமா என்றால் எனக்கு தெரியும் ஆனால் தற்போது என்னால் நினைவுக்கு கொண்டுவரமுடியவில்லை. வழக்கு சொத்து ஆதியில் எனது பாட்டி உண்ணாமலை அம்மாளுக்கு பாத்தியப்பட்டது. அதன் மொத்த விஸ்தீரணம் 21 செண்டு. எனது பாட்டி மேற்படி விஸ்தீரணத்தில் 3 செண்டு நிலத்தை அரசுக்கு தானமாக கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

2. எனது பிரமான வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லிதான் என்னுடைய வழக்கறிஞர் தயாரித்தார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது பிரமான வாக்குமூலத்தில் மேற்படி மூன்று செண்டு நிலம் 6ம் பிரதிவாதிக்கு தானமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி மேற்படி தான செட்டில்மெண்டுப்படி சுவாதீனம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் அதில் நாங்கள் வீடு கட்டியுள்ளோம்.

3. எனது பிரமான வாக்குமூலத்தில் 1 செண்டில் ஆழ்துளை கிணறு இருப்பதாகவும், இரண்டு செண்டு நிலத்தில் தண்ணீர் தொட்டி பஞ்சாயத்தால் கட்டப்பட்டிருந்தது, தற்போது இடிந்து விழுந்துவிட்டது. 15 வருடங்களுக்கு முன்பு தண்ணீர் தொட்டி இடிந்து விழுந்துவிட்டது. ஆழ்துளை கிணறு இன்றும் அங்குள்ளது. அதிலிருந்து

பொதுமக்களுக்கு தண்ணீர் செல்கிறது என்றால் சரிதான். தற்போது வேறு அரசு இடத்தில் தண்ணீர் தொட்டி கட்டப்பட்டுள்ளது. அந்த இடத்தின் சர்வே நெம்பர் எனக்குத் தெரியாது. பட்டா எண் எனக்குத் தெரியாது.

4. ஊர் மக்களுக்கு அதிலிருந்தும் தண்ணீர் செல்கிறது. எனது பாட்டி எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்டுப் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எனது பாட்டி தான செட்டில்மெண்டு மூலம் கொடுத்த நிலத்தை திருப்பி நாங்கள் பெற வேண்டும் என்றால் தானம் பெற்றவர் மீண்டும் எங்களுக்கு பதிவு செய்து கொடுத்தால்தான் நாங்கள் உரிமை கொண்டாட முடியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 1 செண்டு நிலத்தில் ஆழ் துளை கிணறு இன்றும் உள்ளது. வழக்கு சொத்து இரண்டு செண்டு நிலம் 6ம் பிரதிவாதி பஞ்சாயத்தாரால் எதுவும் பத்திரம் மூலம் எங்களுக்கு மீண்டும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் வாய்மொழியாகவும் சொத்தை எடுத்துக்கொள்ளும்படி எங்களிடம் சொல்லவில்லை. வழக்கறிஞர் ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட Writ மனுவில்தான் வழக்கறிஞர் ஆணையர் பார்வையிட்டார். அவர் உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தார் அந்த விபரம் எனது வழக்கறிஞரிடம் உள்ளது.

5. வழக்கு சொத்தின் பட்டா எங்கள் மீது மாறிவிட்டது. 6ம் பிரதிவாதி ஆட்சேபனைமீது தாசில்தார் முன்னிலையில் விசாரணை நடந்தது என்றால் இல்லை. எங்களை யாரும் விசாரணை செய்யவில்லை. விசாரணை முடிவில் எங்கள் மீது பட்டா மாற்றப்பட்டது தவறு என்று முடிவு எடுத்து மீண்டும் பட்டாவை 6ம் பிரதிவாதி பஞ்சாயத்து பெயருக்கே மாறுதல் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. எங்கள் பெயரில்தான் இன்றும் பட்டா உள்ளது. 21.08.2019 அன்று 6ம் பிரதிவாதி பஞ்சாயத்து பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அன்று முதல் பஞ்சாயத்து பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல எங்கள் பெயரில்தான் உள்ளது.

6. Writ மனு 22640/2023-மனுவை நாங்கள் தாக்கல் செய்தோம். அந்த மனு எங்களுக்கு விரோதமாக தள்ளுபடி ஆனது என்றால் சரியல்ல. அது நிலுவையில்தான் உள்ளது. ரிட் மனு 30470/2019 மனுவை பஞ்சாயத்து தாக்கல் செய்தது. அதில் நானும்

எதிர்மனுதாரராக இருந்தேன். மேற்படி ரிட் மனு 24.03.2025-அன்று தீர்ப்பானது என்றால் சரியல்ல. அது நிலுவையில்தான் உள்ளது.

7. உயர் நீதிமன்றம் மேற்படி ரிட் மனுவில் வழக்கு சொத்தில் தண்ணீர் தொட்டி கட்ட அனுமதி அளித்துவிட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அதனால் பிரதிவாதிகள் தண்ணீர் தொட்டி கட்டி முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. வீண் வழக்கு நான் தாக்கல் செய்துள்ளதால் வழக்கை நான் திரும்ப பெற வேண்டியது அவசியம் என்றால் சரியல்ல.

( பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதன்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி 26.06.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது)